பெண்களுக்கெதிரான குற்றச் செயல்கள்

# ஆம் ஆத்மி அரசைக் கண்டித்து பாஜக மகளிர் அணி டிச.16-ல் பேரணி



தில்லியில் வியாழக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கிறார் பாஜக தலைவர் மனோஜ் திவாரி (இடது).

**புது தில்லி, டிச. 13:** தில்லியில் பெண்களுக்கெதிராக நடைபெறும் குற்றச் செயல்களை தடுக்க ஆம் ஆத்மி அரசு தவறிவிட்டதாகக் கூறி, தில்லி பாஜக மகளிர் அணி சார்பில், ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 16) தில்லி ராம்லீலா மைதானத்தில் பேரணி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக பாஜகவின் தில்லி தலைவர் மனோஜ் திவாரி கூறியதாவது: தில்லியில் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவுகிறது. பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் தில்லி அரசு தூங்குகிறது. தில்லி மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மாலிவால், ஆம் ஆத்மியின் மகளிர் அணித் தலைவி போல நடந்து கொள்கிறார்.

பெண் பத்திரிகையாளரைத் தரக் குறைவாகத் திட்டிய ஆம் ஆத்மி எம்எல்ஏ சோம்நாத் பாரதி மீது ஆம் ஆத்மி கட்சி எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பெண்களின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் பேருந்துகளில் மார்ஷல்கள் நியமிக்கப்படுவார்கள், அனைத்து சாலைகளுக்கும் சிசிடிவி கேமரா பொருத்தப்படும் என அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் எதையும் கேஜரிவால் நிறைவேற்றவில்லை.

ஆம் ஆத்மி ஆட்சியில் தில்லியில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், தில்லியில் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட நிர்பயாவின் நினைவு நாளான டிசம்பர் 16- ஆம் தேதி, தில்லி ராம்லீலா மைதானத்தில், பாஜக மகளிர் அணி சார்பில் 'மகிளா ஹுங்கார்' என்ற பெயரில் மாபெரும் பேரணி நடத்தப்படவுள்ளது என்றார் அவர்.

# அனைத்து வகுப்புகளிலும் திருக்குறளை கட்டாயப் பாடமாக்க வேண்டும்

மக்களவையில் அதிமுக வலியுறுத்தல்

நமது நிருபர்

**புதுதில்லி, டிச. 13:** அனைத்து வகுப்புகளிலும் திருக்குறளை கட்டாயப் பாடமாக்க மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் அதிமுக வியாழக்கிழமை வலியுறுத்தியது.

இது தொடர்பாக மக்களவையில் வேலூர் தொகுதி அதிமுக உறுப்பினர் பி.செங்குட்டுவன் விதி எண் 377-இன் கீழ் முன்வைத்த கோரிக்கை: இன்றைய உலகம் நன்னெறியால் வகைப்படுத்தப்படவில்லை. ஆனால், வெற்றிக் கதையால் வகைப்படுத்தப்படுகிறது. தற்போதைய கல்வி அமைப்பு முறையானது, அறநெறியைவிட பயனுடைமை கொள்கைளின் மீது உருவாக்கப்பட்டுள்ளது. நமது பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் அறநெறி அல்லது சமய மதிப்பீடுகளை நாம் பயிற்றுவிக்காததால், நவீன இந்திய வாழ்க்கையில் நல்ல மதிப்பீடுளுக்கு பற்றாக்குறை உள்ளது. இதனால், மனிதநேயமின்மைக்கும், குற்றங்கள் பெருகவும் காரணமாகிறது. எனவே, மிகவும் உயர்வாகப் போற்றப்படும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளை அனைத்து வகுப்புகளிலும் கட்டாயப் பாடமாக்க மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**நிலுவைத் தொகையை விடுவிக்க வேண்டும்:** மக்களவையில் திருப்பூர் தொகுதி அதிமுக வி. சத்தியபாமா விதி எண் 377-இன் கீழ் முன்வைத்த கோரிக்கை: தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய ரூ.8 ஆயிரம் கோடி நிலுவைத் தொகையாக இருப்பதால் ஜவுளித் தொழில்துறை கடும் இன்னல்களைச் சந்தித்து வருகிறது. எனவே, இத்தொகையை உடனடியாக விடுவிக்கவும், சுற்றப்பட்ட நூலிழை உற்பத்தி தொடர்பாக நூற்பாலைகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை 40 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகக் குறைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**'கப்பல் மோதல் சம்பவம்':** விழுப்புரம் தொகுதி அதிமுக உறுப்பினர் எஸ்.ராஜேந்திரன் இந்திய கடலில் கப்பல் மோதல் சம்பவங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு மக்களவையில் வியாழக்கிழமை மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில், '2015-இல் அதுபோன்று சம்பவம் ஏதும் நிகழவில்லை. 2016-இல் ஒரு சம்பவமும், 2017-இல் இரு சம்பவங்களும், 2018-இல் (டிசம்பர் 7-ஆம் தேதிவரை) நான்கு மோதல் சம்பவங்களும் நிகழ்ந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

**காவல் துறை கட்டமைப்புக்கு நிதி ஒதுக்கீடு:** மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் வா. மைத்ரேயன், தமிழ்நாட்டில் காவல்துறை கட்டமைப்பை மேம்படுத்துவது, நவீனமயமாக்குவது தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு மத்திய உள்துறை இணையமைச்சர் ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் புதன்கிழமை அளித்துள்ள பதிலில், 'மாநில அரசின் தேவை மற்றும் செயல்பாட்டிற்கு கூடுதல் வலு சேர்க்க ஒவ்வொரு ஆண்டும் காவல்துறை கட்டமைப்பை மேம்படுத்தவும், நவீனமயமாக்கவும் அந்தந்த மாநில அரசின் கோரிக்கையின்படி மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இதனடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளில் முறையே ரூ.63.90 கோடி, ரூ.89.24 கோடி, ரூ.15.54 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது. 2018-19-ஆம் ஆண்டுக்கு (30-11-2018 வரை) ரூ.37.85 கோடி நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது' என்றார்.

## எம்என்பி திட்டத்தை விரைந்து செயல்படுத்த டிராய் நடவடிக்கை

**புது தில்லி, டிச. 13:** எம்என்பி எனப்படும் தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்களை விரைந்து மாற்றிக் கொள்ளும் வகையில் தொலைத் தொடர்பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) புதிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செல்லிடப்பேசி எண் மாறாமல், வாடிக்கையாளர்கள் தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்களை மட்டும் மாற்றிக் கொள்ளும் (எம்என்பி) வசதியை விரைவாகவும், சுமுகமாகவும் மேற்கொள்ளும் வகையில் டிராய் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, ஒரே தொலைத் தொடர்பு வட்டத்துக்குள் சேவை மாற்றம் கோரி வரும் கோரிக்கைகளுக்கு 2 வேலை நாள்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும். அதேபோன்று, ஒரு தொலைத் தொடர்பு வட்டத்தை விட்டு இதர தொலைத் தொடர்பு வட்டங்களுக்கு மாற விரும்பும் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு 4 வேலை நாள்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும்.

எம்என்பி திட்டத்தை செயல்படுத்த வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் யுபிசி குறியீட்டிற்கான வேலிடிட்டி காலம் 15 நாள்களிலிருந்து 4 நாள்களாக குறைக்கப்படுகிறது. தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்களை மாற்றிக் கொள்ளும் வசதியை கோரும் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகள் தவறான முறையில் நிராகரிக்கப்பட்டது தெரிய வந்தால் தலா ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

மேலும், எம்என்பி கோரிக்கையை திரும்பப் பெறுவதற்கான நடைமுறைகள் விரைவாகவும், சுமுகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அவை குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) மூலம் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படும் என டிராய் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## சச்சின் பைலட், ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு விஜய் மல்லையா வாழ்த்து: புதிய சர்ச்சை

**புது தில்லி, டிச.13:** நிதி மோசடி விவகாரத்தில் சிக்கியதால் நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் தஞ்சமடைந்துள்ள தொழிலதிபர் விஜய் மல்லையா, சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சச்சின் பைலட், ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்திருப்பது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட வங்கிகளிடம் சுமார் ரூ.9,000 கோடி ரூபாய் கடன் வாங்கிவிட்டு, அதை திருப்பி செலுத்தாத விஜய் மல்லையா, தனக்கு எதிராக நீதிமன்றம் மூலம் வங்கிகள் நடவடிக்கை எடுப்பதை அறிந்ததும், நாட்டை விட்டு ரகசியமாக வெளியேறினார். பிரிட்டன் தலைநகர் லண்டனில் தற்போது அவர் தஞ்சமடைந்துள்ளார். இதனிடையே விஜய் மல்லையாவுக்கு எதிரான வழக்கை விசாரித்த லண்டன் நீதிமன்றம், இந்தியாவுக்கு அவரை நாடு கடத்தும்படி அண்மையில் உத்தரவிட்டது.

இந்நிலையில், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மிஸோரம், தெலங்கானா ஆகிய 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் கடந்த 11ஆம் தேதி வெளியாகின. இதில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. இதில் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் போட்டியிட்டு வென்ற காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சச்சின் பைலட், ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோருக்கு விஜய் மல்லையா தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இதுகுறித்து சுட்டுரையில் அவர் வெளியிட்ட பதிவில், 'இளம் சாம்பியன்களான சச்சின் பைலட், ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோருக்கு எனது வாழ்த்துக்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

நிதி மோசடி விவகாரத்தில் தாம் சிக்க வைக்கப்பட்டு விட்டதாகவும், அரசியல் கட்சிகளால் தாம் பழிவாங்கப்பட்டு இருப்பதாகவும் விஜய் மல்லையா குற்றம்சாட்டி வந்தார். இந்த சூழ்நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சச்சின் பைலட், ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதனால் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

# தில்லி பேரவை வெள்ளி விழாவில் அத்வானி பங்கேற்கவில்லை

சட்டப்பேரவைத் தலைவர் கோயல் தகவல்

நமது நிருபர்

**புது தில்லி, டிச. 13:** தில்லி சட்டப்பேரவை வெள்ளிவிழாவில் பாஜகவின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி பங்கேற்கவில்லை என்று சட்டப்பேரவைத் தலைவர் ராம்நிவாஸ் கோயல் தெரிவித்துள்ளார்.



தில்லி சட்டப்பேரவை தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதைக் குறிப்பிடும் வகையில், வரும் சனிக்கிழமை (டிசம்பர் 15) வெள்ளி விழா நிகழ்வு நடைபெறுகிறது.

இதில் பாஜகவின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, முதல்வர் அரவிந்த் கேஜரிவால் ஆகியோர் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதாக பேரவைத் தலைவர் ராம் நிவாஸ் கோயல் இரு தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தார்.

சட்டப்பேரவை வெள்ளி விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்க பாஜகவின் மூத்த தலைவருக்கு ஆம் ஆத்மி அரசு அழைப்பு விடுத்தது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

தில்லி பாஜக தலைவர் மனோஜ் திவாரி, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் விஜேந்தர் குப்தா ஆகியோர் தில்லி அரசின் முடிவை வரவேற்றிருந்தனர். ஆனால், பாஜகவை தொடர்ந்து விமர்சித்து வரும் ஆம் ஆத்மி கட்சி தலைமையில் நடைபெறும் விழாவில் அத்வானி பங்கேற்பதற்கு பாஜகவின் முக்கிய தலைவர்கள் சிலர் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், தனிப்பட்ட காரணங்களால் தில்லி சட்டப்பேரவை வெள்ளிவிழா நிகழ்வில் அத்வானி கலந்து கொள்ளமாட்டார் என்று ராம்நிவாஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வியாழக்கிழமை அளித்த பேட்டியில், 'தில்லி மெட்ரோபாலிட்டன் கவுன்சிலின் முதலாவது தலைவராக 1966- 1970 வரை அத்வானி பதவி வகித்துள்ளார்.

நாட்டிலுள்ள மிகவும் மூத்த அரசியல் தலைவர் அவர்தான். அந்த வகையில் அவரை இந்த வெள்ளி விழாவுக்கு தலைமை விருந்தினராக பங்கேற்க வேண்டும் என்று அழைத்திருந்தேன்.

எனது அழைப்பை முதலில் அவர் ஏற்றுக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்வதாக உறுதியளித்தார். ஆனால், தற்போது தனிப்பட்ட காரணங்களால் அத்வானியால் வெள்ளிவிழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாது என அவரது தனி உதவியாளர் என்னிடம் தெரிவித்துள்ளார்' என்றார்.

பாஜக, காங்கிரஸ் புறக்கணிப்பு

**புது தில்லி, டிச. 13:** வரும் சனிக்கிழமை (டிசம்பர் 5) நடைபெறவுள்ள தில்லி சட்டப்பேரவை வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை பாஜக, காங்கிரஸ் கட்சிகள் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.



இது தொடர்பாக பாஜகவின் மூத்த தலைவரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான விஜேந்தர் குப்தா வியாழக்கிழமை கூறியதாவது:

தில்லி சட்டப்பேரவை வெள்ளி விழாவில் கலந்து கொள்வது தொடர்பாக பாஜக எம்எல்ஏக்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் பேரவை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. அப்போது, நாட்டின் அரசியல் அமைப்பு சட்டம், தில்லி சட்டப்பேரவை விதிகளுக்கு மாறாக நடந்து கொள்ளும் தில்லி அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து, வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றார் அவர்.



காங்கிரஸ்: இதேபோன்று காங்கிரஸ் கட்சியும் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை புறக்கணிக்கவுள்ளதாக தில்லி காங்கிரஸ் தலைவர் அஜய் மாக்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'வெள்ளி விழாக் கொண்டாட்டத்துக்கு அனைத்துக் கட்சிகளையும் கொண்ட குழுவை ஆம் ஆத்மி அரசு அமைக்கத் தவறியுள்ளது. 15 ஆண்டுகள் தில்லி முதல்வராகவும், 25 ஆண்டுகள் சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்த ஷீலா தீட்ஷித்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இது தொடர்பாக ஷீலா தீட்ஷித் உள்ளிட்ட முக்கியத் தலைவர்களுடன் பேசினோம். இதைத் தொடர்ந்து, வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் காங்கிரஸ் கட்சி பங்கேற்பதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது' என்றார்.

# தில்லியில் காற்று மாசு சற்று குறைந்தது

**புது தில்லி, டிச. 13:** தில்லியில் வியாழக்கிழமை பெய்த மழையின் காரணமாக காற்று மாசு சற்று குறைந்தது. எனினும், இந்தநிலை தொடராது என்று வானிலை ஆய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



தில்லி, தேசிய உயிரியல் பூங்காவில் வியாழக்கிழமை முகத்தில் முகக் கவசம் அணிந்து வந்த இளைஞர்கள்.

தில்லியின் ஒட்டுமொத்த காற்று மாசு குறியீட்டு அளவு கடந்த மூன்று நாள்களாக 400-இல் (மிகவும் மோசம்) நீடித்து வந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை மழை பெய்ததால், காற்றில் கலந்திருந்த மாசு குறைந்தது.

இதனால் வியாழக்கிழமை ஒட்டுமொத்த காற்று மாசு குறியீட்டு அளவு 208-ஆக பதிவானதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்தது. எனினும், தில்லியில் மோசமான பிரிவிலேயே காற்று மாசு உள்ளது.

ஒட்டுமொத்த காற்றின் தரக் குறியீடு 0-50 வரை இருந்தால் நல்ல பிரிவிலும், 51- 100 திருப்திகரம், 101 - 200 மிதமானது, 201 - 300 மோசம், 301 - 400 மிகவும் மோசம், 401 - 500 என இருந்தால் காற்று மாசு கடுமையான பிரிவில் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது.

தில்லியில் 17 பகுதிகளில் வியாழக்கிழமை காற்று மாசு மோசமான பிரிவிலும், 19 பகுதிகளில் காற்று மாசு மிதமான பிரிவிலும் இருந்தது.

காஜியாபாத், ஃபரீதாபாத் ஆகிய பகுதிகளிலும் வியாழக்கிழமை காற்று மாசு மோசமான பிரிவிலும், குருகிராம், நொய்டா ஆகிய பகுதிகளில் மிதமான பிரிவிலும் இருந்தது.

காற்றின் தரத்தைக் கண்டறியும் மத்திய அரசின் அமைப்பான காற்று தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு ஆய்வுநிறுவனம் (சஃபர்) வியாழக்கிழமை வெளியிட்டுள்ள தகவலில், 'தில்லியில் காற்றின் வேகம் அதிகரித்திருப்பதன் காரணத்தாலும், மழை பெய்து வருவதாலும் காற்று மாசு மேலும் குறைய வாய்ப்புள்ளது.

எனினும், தில்லியில் ஈரப்பதம் அதிகரிப்பதன் காரணத்தாலும், வெப்பநிலை குறைவதன் காரணத்தாலும் காற்று மாசு மேலும் அதிகரிக்க கூடும். இதனால் வெள்ளிக்கிழமை காற்று மாசு மிகவும் மோசமான பிரிவுக்கு செல்லக் கூடும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான்கரை ஆண்டுகளில் விளம்பரங்களுக்கு மத்திய அரசு ரூ.5,200 கோடி செலவு: அமைச்சர் தகவல்

**புது தில்லி, டிச.13:** கடந்த நான்கரை ஆண்டுகளில் விளம்பரங்களுக்காக மத்திய அரசு ரூ.5,200 கோடி செலவு செய்துள்ளதாக நாடாளுமன்றத்தில் மத்திய தகவல், ஒளிபரப்புத் துறை இணையமைச்சர் ராஜ்யவர்த்தன் ரத்தோர் கூறியுள்ளார்.

இதுதொடர்பான கேள்வியொன்றுக்கு மக்களவையில் அவர் வியாழக்கிழமை எழுத்துப்பூர்வமாக அளித்த பதில்:

அரசின் திட்டங்களை பிரபலப்படுத்தும் நோக்கத்தில், விளம்பரங்களுக்காக, கடந்த 2014-15-ஆம் ஆண்டில் ரூ.979.78 கோடியும், கடந்த 2015-16-ஆம் ஆண்டில் ரூ.1,160.16 கோடியும், 2016-17-ஆம் ஆண்டில் ரூ.1,264.26 கோடியும், 2017-18-ஆம் ஆண்டில் ரூ.1,313.57 கோடியும், 2018-19-ஆம் ஆண்டில் டிசம்பர் 7-ஆம் தேதி வரை ரூ.527.96 கோடியும் செலவிடப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக, கடந்த 2014-15-ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ரூ. 5,245.73 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இவற்றில், செய்தித்தாள், வார, மாத இதழ்கள் என அச்சு ஊடகங்களுக்கான விளம்பரங்களுக்கு ரூ.2,282 கோடியும், வானொலி மற்றும் தொலைக்காட்சி, இணையதளம் உள்ளிட்ட காட்சி ஊடக விளம்பரங்களுக்கு ரூ.2,312.59 கோடியும், பதாகைகள், சுவர் விளம்பரம் உள்ளிட்ட பொதுவெளி விளம்பரங்களுக்காக ரூ.651.14 கோடியும் செலவிடப்பட்டுள்ளது என்று ராஜ்யவர்த்தன் ரத்தோர் கூறினார்.


அட்டவணை II
படிவம் B
பொது அறிவிப்பு
(இன்சால்வன்ஸி மற்றும் பாங்க்ரப்ட்சி ஒழுங்குமுறை 12-ன் கீழ்
(கலைப்பு செயல்முறைகள்) ஒழுங்குமுறைகள் 2016)

| | | |
|---|---|---|
| 1. | பெருநிறுவன கடன்தாரரின் பெயர் | நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் |
| 2. | கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி | 20/05/1991 |
| 3. | பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது/ பதிவு செய்யப்பட்டுள்ளது | கம்பெனிகள் பதிவாளர், சென்னை |
| 4. | பெருநிறுவன கடன்தாரரின் பெருநிறுவனத்தின் அடையாள எண் | U30006TN1991PLC020837 |
| 5. | பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி | MD சேம்பர்ஸ், 53, டாக்டர் R.K.சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004 |
| 6. | நொடிப்பு தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி | 11/12/2018 |
| 7. | பெருநிறுவன கடன்தாரரின் கலைப்பு ஆரம்ப தேதி | 11/12/2018 |
| 8. | கலைப்பு அதிகாரியின் பெயர் முகவரி<br>மின்னஞ்சல்,<br>தொலைபேசி எண்.<br>பதிவு எண். | **V.மகேஷ் & அசோசியேட்ஸ், 39/19, 3வது தளம், ஆல்பென் கோர்ட், 6வது பிரதான சாலை, RA புரம், சென்னை-600 028**<br>maheshvenki@vmacs.co.in / vmacsibc@vmacs.co.in<br>044-24331082<br>IBBI/IPA-002/IP-N00307/2017-18/10865 |
| 9. | உரிமைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி | 10/01/2019 |

மாண்புமிகு தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை **11/12/2018** தேதியிட்ட உத்தரவின் படி **நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்** நிறுவனத்தை கலைக்க ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

**நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்**-ன் பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை 10/01/2019 அன்று அல்லது அதற்கு முன்பாக வரிசை எண்.8-ல் குறிப்பிட்டுள்ள கலைப்பு அதிகாரியை முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இன்சால்வன்ஸி மற்றும் பாங்க்ரப்ட்சி போர்டு ஆப் இந்தியா (கலைப்பு செயல்முறைகள்) ஒழுங்குமுறை 2016-ன் படி அத்தியாயம் IV -ல் குறிப்பிட்டுள்ளபடி தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை கீழ்குறிப்பிட்டுள்ள அதற்கான படிவங்களின் சமர்ப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

படிவம் - C செயல்முறை கடன்தாரர்கள் உரிமைகோரலுக்கான ஆதாரம், தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தவிர, படிவம் - D - நிதி கடன்தாரர்களின் உரிமைகோரலுக்கான ஆதாரம், படிவம் - E - தொழிலாளர்கள் அல்லது ஊழியர்கள் உரிமைகோரலுக்கான ஆதாரம், படிவம் - F - தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுடைய அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் உரிமைகோரலுக்கான ஆதாரம், படிவம் - G - பங்குதாரர்கள் உரிமை கோரலுக்கான ஆதாரம்.

மேற்குறிப்பிட்ட படிவங்களை IBBI -ன் www.ibbi.gov.in என்ற வலைதளத்தில் கலைப்பு செயல்முறைகள் படிவத்தின் கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிதி கடன்தாரர்கள் தங்களது உரிமைகோரலுக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற பங்குதாரர்கள் தங்களது உரிமைகோரல்கள் ஆதாரங்களை அஞ்சல் வழியாகவும், மின்னணு மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

போலியான அல்லது தவறான ஆதாரங்களை உரிமைகோரலுக்காக சமர்ப்பிப்பது தண்டனைக்கு வழிவகுக்கும்.

ஒப்பம்/-
தொழில் வல்லுநர்
நாகார்ஜுனா ஆயில்
கார்ப்பரேஷன் லிமிடெட்-க்கான கலைப்பு அதிகாரி
IBBI/IPA-002/IP-N00307/2017-18/10865

நாள் : 13.12.2018,
இடம் : சென்னை



**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18**

**செங்கல்பட்டு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் / மாவட்ட தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் அறிவிப்பு**

(1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண். 52(5)—ன் கீழ்) தேர்தல் திட்டம் **(EP (CV)/No.3/2018)**

| வ. எண். | சங்கத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை: ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | பெண்கள் | பொது | மொத்தம் | தொகுதிகள் இருப்பின் தொகுதியின் பெயர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | வேட்பு மனு தாக்கல் | வேட்பு மனு பரிசீலனை | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | போட்டியிடும் வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடும் நாள் | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 (அ) | 3 (ஆ) | 3 (இ) | 3 (ஈ) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | ஜி.எஸ்.145 தாம்பரம் ஏர்போர்ஸ் சிவிலியன் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | – | – | 1 | 1 | – | நாள்: 27.12.2018 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 10.00 மு.ப. முதல் 5.00 பி.ப. | நாள்: 28.12.2018 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 11.00 மு.ப. முதல் 4.00 பி.ப. | நாள்: 28.12.2018 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 5.00 பி.ப. | நாள்: 29.12.2018 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 10.00 மு.ப. முதல் 4.00 பி.ப. | நாள்: 29.12.2018 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 5.00 பி.ப. | நாள்: 02.01.2019 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 8.00 மு.ப. முதல் 5.00 பி.ப. | நாள்: 03.01.2019 இடம்: சங்க கட்டிடம் நேரம்: 10.00 மு.ப. முதல் |

இடம் : செங்கல்பட்டு, நாள் : 12.12.2018

(ஒம்)/– ர. சிவக்குமார், துணைப்பதிவாளர் / மாவட்ட தேர்தல் அலுவலர், செங்கல்பட்டு சரகம்



**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை–18**

**காஞ்சிபுரம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் / மாவட்டத் தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் அறிவிப்பு**

**(1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண்.52 உபவிதி (6) (a)–ன் கீழ்)**

| வ.எண் | சங்கத்தின் பெயர் | தேர்தல் அலுவலர் பெயர் மற்றும் பதவி | இனம் வாரியாக தற்போது காலியாக உள்ள தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | பெண்கள் | பொது | மொத்தம் | வேட்புமனு தாக்கல்: நாள் | இடம் | நேரம் | பரிசீலனை: நாள் | இடம் | நேரம் | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல்: நாள் | இடம் | நேரம் | திரும்பப் பெறுதல்: நாள் | இடம் | நேரம் | போட்டியிடும் வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடுதல்: நாள் | இடம் | நேரம் | போட்டி இருப்பின் வாக்குப் பதிவு நடைபெறுதல்: நாள் | இடம் | நேரம் | பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவித்தல்: நாள் | இடம் | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 (அ) | 4 (ஆ) | 4 (இ) | 4 (ஈ) | 5 | | | 6 | | | 7 | | | 8 | | | 9 | | | 10 | | | 11 | | |
| 1 | பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கி | திரு. ஆர். ஜெகன்சிங் ராஜன், துணைப் பதிவாளர்/ முதன்மை வருவாய் அலுவலர். | - | 1 | - | 1 | 27.12.18 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 10 AM to 5 PM | 28.12.18 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 11 AM to 4 PM | 28.12.18 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 5 PM | 29.12.18 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 10 AM to 4 PM | 29.12.18 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 5 PM | 2.1.19 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 8 AM to 5 PM | 3.1.19 | வங்கி கட்டடம், தலைமை யகம் | 10 AM |

நாள் : 12.12.2018
இடம்: காஞ்சிபுரம்

துணைப்பதிவாளர் / மாவட்ட தேர்தல் அலுவலர்
காஞ்சிபுரம் சரகம்